# எதிர்வரும் தேர்தல்களுக்காக ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி முன்வைக்கும் வேலைத்திட்டம்

## *பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்*

● *இலங்கை எதிர்கொள்ளும் ஆழமான பொருளாதார நெருக்கடி நிலைக்குத் தீர்வுகளை வழங்கும் குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால புரிந்துணர்வுடன் கூடிய அவசரகால பொருளாதார திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.*

● *IMF,India,China உட்பட வெளிநாடுகளுக்குச் செலுத்தவேண்டிய கடன்களும் உள்ளூர் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறு வியாபார முயற்சியாளர்கள் பெற்ற நுண் கடன்கள் உட்பட அனைத்து ஏழை மக்களும் பெற்ற கடன்களை உடனடியாக ரத்து செய்து, அதனால் எழக்கூடிய சவால்களை எதிர்கொள்ள இலங்கை சமூகத்தை அணிதிரட்ட வேண்டும்.*

● *சீனா/இந்தியா/மேற்கத்திய நாடுகள் உட்பட கோடீஸ்வரர்களுடன் செய்து கொண்ட அனைத்து ஒப்பந்தங்களையும் திரும்பப் பெறுவதை ஆரம்பித்தல்.*

● *கல்வி, சுகாதாரம் மற்றும் எரிசக்தி துறைகளில் தற்போது இடம்பெறும் அனைத்து தனியார்மயமாக்கல் நடவடிக்கைகளையும் மாற்றியமைக்க செயற்படுதல்.*

● *நவீன லிபரல் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய வளங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கள்ளவியாபாரிகளுக்கு விற்பதை நிறுத்தி, பொருளாதாரத்தின் முக்கிய அதிகார மையங்களான மத்திய வங்கி, அரச வங்கிகள்- காப்புறுதி நிறுவனங்கள், துறைமுகங்கள் உட்பட விமான நிலையங்களை ஜனநாயக தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்க வேண்டும்.*

- விவசாயிகள், மீனவர்கள் போன்ற குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு மானியங்களை அதிகரித்தல். தற்போது நாற்பது(40) லட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வேலையற்ற மற்றும் ஏழைக் குடும்பங்களுக்குப் போதுமான நிவாரணத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.

● அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் தொழிலாளர்களை உள்ளடக்கிய மேற்படி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் ஒரு விநியோக வழிமுறையை நிறுவுதல்.

● ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர் குழுக்களின் மேற்பார்வையின் கீழ் அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் மீதும் விலைக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.

● அத்தியாவசிய உணவு மற்றும் ஏனைய பொருட்களின் உற்பத்தியை நவீனமயமாக்க உதவும் வகையில் தொழில் வளர்ச்சிக்காக உள்ளூர் தொழில் முயற்சிகளின் முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.

● வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் மூலதனப் பாய்ச்சலைத் தடுக்க மூலதனக் கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்துதல்.

● மக்களை ஒடுக்கும் அமெரிக்காவின் வரிக் கொள்கையை அவசரமாகத் திருத்தி, பெரும் பணக்காரரர்கள் மீது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை (VAT) விதித்து, அவர்களால் வரி ஏய்ப்பைத் தவிர்க்க அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
● ராஜபக்ஷ குடும்பம் மற்றும் மத்திய வங்கிக் கொள்ளை போன்ற அரசியல் அதிகாரங்களால் சூறையாடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் - அனைத்து

வகையான அரச ஊழலுக்கும் முடிவுகட்ட தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- முப்பது (30) வருடகால யுத்தம் மற்றும் கடந்த 2022 காலிமுகப் போராட்டத்தின் போது (அரகலய) ரணில்-ராஜபக்ஷ அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகள் மற்றும் அட்டூழியங்களை விசாரிக்க சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய பொது விசாரணைக் குழுவை நிறுவுதல்.

● அரசாங்கத் துறையை நெறிப்படுத்துவதை திட்டமிட்டு , கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக போதிய நிதியை ஒதுக்கவும், கல்வி மற்றும் சுகாதாரத்தை முற்றிலும் இலவசமாக்கவும் ஓர் திட்டம் அமுலாக்கப்படவேண்டும்.

● சுற்றுச்சூழலைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து, சுற்றுச்சூழல் நட்பு முதலீடுகள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.நிலைபேறான திட்டங்களுடன் நீண்டகால பொருளாதார நலன்களை கருத்திற்கொண்டு சுற்றாடலுக்குப் பாதகமான அனைத்து கருத்திட்டங்களையும் இரத்துசெய்தல்.

- வெளிநாட்டு வர்த்தகமும் அரச கொள்கைகளும் பொதுமக்களின் நலனுக்காக அமைய வேண்டும், மூலதனத்தின் நலன்களுக்காக அல்லாமல், சர்வதேச ஒத்துழைப்பின் அடிப்படையில் ஒரு சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

● நாட்டுக்குத் தேவையான உணவுப் பயிர்களை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு நிலம், நீர் மற்றும் பசளை வசதிகளை வழங்குவதற்காக, மாவட்ட அளவில் விவசாயிகள் பிரதிநிதிகள் உள்ளிட்ட செயல்பாட்டுக் குழுக்களை நியமித்து, அவற்றைப் பராமரிக்கத் தேவையான வசதிகளை அரசு வழங்கவேண்டும்..

● ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) போன்ற தொழிலாள வர்க்க நிதிகளில் முதலீடு செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்தொழிற் சஙகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய கமிட்டி மூலம் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

## ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக

● நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உடனடியாக நீக்கி பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்குத் தொகுதிவாரி முறையையும், விகிதாசார முறையையும் அனுசரித்த வழிமுறையினை அறிமுகப்படுத்த வேண்டும்.

- கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் சமூக ஊடகங்களுக்கு எதிரானசட்டங்கள் உட்பட அனைத்து ஜனநாயக விரோத சட்டங்களையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

.

- சம ஊதியம் உட்பட அனைத்து பெண்களின் உரிமைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்..

- மதத்தை வழிபடும் உரிமையையும் மதத்தை அனுசரிக்காத உரிமையையும் பாதுகாத்தல்வெண்டும். அதே சமயம் முஸ்லிம் மக்களின் மதச் சுதந்திரத்திற்கு ஏற்படும் தடைகளை நீக்கி, அனைத்து மதங்களையும் அரச கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தல் வேண்டும்..

- LGBITQ+ சமூகத்தின் அனைத்து உரிமைகளுக்கும் உத்தரவாதம் வழங்குதல் வேண்டும்

- சுதந்திரமான ஊடகத்தை உருவாக்க, முதலீடு செய்யும் பணக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட, ஊடக ஊழியர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் குழுக்கள், சுதந்திரமான ஊடக நெறிமுறைகளை உருவாக்க, பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உட்பட அனைத்து ஜனநாயக உரிமைகளையும் நிறுவுதல் வேண்டும்.

- ஏகாதிபத்திய சக்திகளால் நடத்தப்படும் போர்கள் மூலம் நாடுகள் மற்றும் பிரதேசங்களை வலுக்கட்டாயமாக ஆக்கிரமிப்பதை எதிர்த்து, உலகின் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே சர்வதேச ஒற்றுமையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- வெகுஜன இயக்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு புரட்சிகர அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி, அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசியலமைப்பு பற்றிய புதிய நலந்துரையாடலைத் தொடங்க வேண்டும்..

## *தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்துதல்*

- விலைவாசி உயர்வுக்கு ஏற்றவாறு மலையத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களின் ஊதியத்தை உடனடியாக உயர்த்தி, குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து, 35 மணி நேர வேலை வாரத்தை அமுல்படுத்த வேண்டும்.

- அனைத்து தொழிற்சங்க விரோதச் சட்டங்களையும் ரத்து செய்து அனைத்து தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கத்தில் சேருவதற்கான அடிப்படை உரிமையை வழங்க வேண்டும்

● அனைத்து பணியிடங்களிலும் தொழிலாளர் குழுக்களை அமைப்பதில் தொழிற்சங்கங்கள் முன்னணியில் இருக்க வேண்டும் மற்றும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களை ஒன்றிணைக்கும் தொழிற்சங்கங்களின் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

● அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலைப் பாதுகாப்பையும் வேலை வாய்ப்பு உருவாக்கத்தையும் உறுதி செய்வதற்காக அனைத்து முக்கியத் துறைகளிலும் முதலீடுகளுடன் ஒருங்கிணைப்பு மையத்தை நிறுவுதல் வேண்டும்.

## *தேசியஇனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறை*

● அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக மற்றும் நிபந்தனையின்றி விடுதலை செய்தல் வேண்டும்.

● காணாமல் போனவர்கள் தொடர்பான உடனடி விசாரணைகள மேற்கொண்டு அவை மூலம் கிடைக்கும் தகவல்களை பகிரங்கப்படுத்த வேண்டும்.

- சிவில் விவகாரங்களில் இராணுவ ஈடுபாட்டை உடனடியாக நிறுத்துதல் மற்றும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இராணுவத்தை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

● வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்து நிலங்களையும் அவற்றின் அசல் உரிமையாளர்களுக்கு விடுவித்து, நிலமற்ற அனைவருக்கும் பயிர்ச்செய்கைக்கு நிலம் வழங்குவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ள. வேண்டும்

● தேசியஇனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக, 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி, அதிகாரப் பகிர்வு செயல்முறைக்கு புத்துயிர் அளிக்க வேண்டும்.

● தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

● சட்டப் புத்தகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட தமிழை தேசிய மொழியாக பயன்படுத்துவதற்கான உரிமையை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை ஒட்டுமொத்த இலங்கைச் சமூகத்திலும் சமமான சூழ்நிலையில் எடுத்தல் வேண்டும்..

● மலையக மக்களின் சொந்த வீட்டுரிமையை உறுதிப்படுத்தி, மலையக மக்களை ஏனைய பிரதான சமூகங்களுக்கு இணையான தனி அடையாளத்துடன் சுதந்திர இலங்கை மக்களாக அங்கீகரித்தல் வேண்டும்

● *சமூகத்தின் நன்மைக்காக அனைத்து வளங்களையும் பயன்படுத்துவதற்காக உழைக்கும் மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு ஜனநாயக உற்பத்தித் திட்டத்தை செயல்படுத்தும் திறன் கொண்ட ஒரு சோசலிச சமுதாயத்தை நிறுவுவதற்கு தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட போராட்டத்திற்காக ஐக்கிய சோசலிஸ்ட் கட்சியானது முன்நிற்கிறது.*

***அனைத்து தேர்தல்களிலும் ஐக்கிய சோசலிஸட் கட்சியின் வேட்பாளர்களாக போட்டியிடும் அரசியல் பிரதிநிதிகள் உத்தரவாதம் அளிக்கும் சில முக்கிய வாக்குறுதிகள் பின்வருமாறு :***

★ ***மக்கள் பிரதிநிதிகளின் சம்பளம்***- *நமது தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அரசியல் பிரதிநிதிகளும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் சம்பள அளவிற்கு தமது சம்பளத்தை மட்டுப்படுத்தப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகளுக்குத் தேவையற்ற சிறப்புரிமைகளை நீக்குதல்வேண்டும். மேலதிகமான அனைத்து சம்பளமும் சமூக மாற்றத்திற்கான பொதுப்போராட்டத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒதுக்கவேண்டும்.*

★ ***வெளிப்படைத்தன்மை***- *எங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அனைத்து செலவுகள் மற்றும் செயல்பாடுகள் முழுமையாக வெளிப்படைத்தன்மை கொண்டவையாகவும், மாதாந்த வரவு-செலவு அறிக்கை பொது மக்களின் பரிசீலனைக்கும் திறந்திருக்க வேண்டும்..*

★ ***திரும்பப் பெறுவதற்கான உரிமை***- *கட்சியால் பகிரங்கமாக முன்வைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அட்டவணையின்படி எங்கள் பிரதிநிதிகள் செயல்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட எங்கள் பிரதிநிதிகள் எங்கள் வேலைத் திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் செயல்படுத்த உறுதியளிப்பார்கள். அவ்வாறு செய்யத் தவறினால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி எந்த நேரத்திலும் திரும்ப அழைக்கப்படுவார்*